10.5 சுதந்திரப் போராட்டத்தில்

# தமிழகம்

## (i) விடுதலைப் போராட்டங்கள்

1. A. சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கைப் பற்றி மதிப்பிடுக.

1. B. தமிழகத்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டங்களையும், அதில் பங்குபெற்ற தேசீயத் தலைவர்களையும்பற்றி விளக்கி எழுதுக.

### 1. தூக்குமேடை ஏறிய வீரர்கள்

உரிமைக்குரல் கொடுத்து உயிருக்கு அஞ்சாது தூக்குமேடை சென்றான் அன்று வீரப்பாண்டிய கட்டபொம்மன்! வானம் பொழிகின்றது; பூமி விளைகின்றது; மன்னவன் காணிக்கை ஏன் கொடுப்பேன்? தானமெனில் தருவேன்; வரி எனில் தாரேன் என்று ஒரு தனிமரமாகக் குரல் எழுப்பி சிங்கநாதம் போட்டார். இவரது வரிகொடா இயக்கம் பிற்காலத்தில் காந்தி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்திற்கு வழிகாட்டியானது.

ஊமைத்துரை மருதுபாண்டியரிடம் அடைக்கலம் புகுந்தார். அதனால் ஆங்கிலேயர் மருது பாண்டியரை ஒடுக்கப் போர் புரிந்தனர். 1804–ல் சிவகங்கைப்போர் நடைபெற்றது. கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்த புதுக்கோட்டைத் தொண்டைமான் மருதுபாண்டியர்களையும் காட்டிக்கொடுத்து அவர்களைக் கயிற்றில் தொங்கவிட வைத்தார். திருச்சிப் பிரகடனத்தில் மருது பாண்டியர் வெளியிட்ட அறிக்கை பிற்காலத்தில் 1942–ல் மகாத்மா காந்தி தொடங்கிய வெள்ளையனே வெளியேறு முழக்கத்தின் முதற்பதிப்பு! உள்ளத்தில் அடக்கி வைத்த உணர்ச்சிகளை உதடுகளாலும் வெளிப்படுத்த இயலாப் படைவீரர்கள் 1806–ல் வேலூரில் புரட்சி செய்தனர்; தலைப்பாகையை வீசியெறிந்தனர்; இரவோடு இரவாகக் கோட்டையைப் பிடித்தனர். இது 1857–ல் நடைபெற்ற சிப்பாய்க் கலகத்திற்கு ஒரு வழிகாட்டியாக இருந்ததன்றோ?

Scanned with CamScanner

இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டிலும் நடைபெற இருந்த போராட்டங்களுக்கு ஒத்திகைகள் தமிழகத்தில்தான் நடைபெற்றன.

வ. உ. சி. செக்கிழுத்தார் : உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை என்று ஆங்கிலேயரை பாரதியார் தம் நாவன்மையால் விரட்டினார் ; திருப்பூர் குமரன் கொடி காத்தார்; பல தியாகிகள் தடியடிக்கு ஆளாயினர். குண்டடிபட்டுக் குருதி கொட்டினர். இவ்வாறு வாழையடி வாழையாக வளர்ந்துவந்த வேள்வித்தீயைச் செந்நீர்விட்டு வளர்த்தனர். அப் போராட்டங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்துக் காணலாம் :

## 2. ஒத்துழையாமை இயக்கம்

ஜாலியன் வாலாபாக் படுகொலை இந்திய சுதந்திரப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது. ஆங்கிலேயர் திசை மாறினர் ; அவர்கள் சொல்லுவது ஒன்று நடத்துவது ஒன்று என்பதை இந்தியர் அறிந்தனர் ; நரியின் வேஷம் கலைந்தது ; மக்கள் விழித்துக்கொண்டனர். ஆங்கில அரசுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க காந்தி முடிவு செய்தார். 1920-ல் நாகபுரியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் இது முடிவு செய்யப்பட்டது. அம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தமிழ்நாட்டு விஜயராகவாச்சாரி "ஒத்துழையாமை இயக்கம், இந்தியா ஆங்கிலேயரின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திரம் அடைவதையே குறிக்கோளாக கொண்டிருக்கவேண்டும் என்று கூறினார். காந்தி இதனை வரவேற்று அவருக்குப் புகழ்மாலை சூட்டினார்.

அதன்படி சுதேசிப் பொருள்களை மக்கள் பயன்படுத்த வேண்டும். தீண்டாமையை விலக்கவேண்டும்; போதைப் பொருள்களைப் புறக்கணிக்கவேண்டும் ; தேசீயப் பள்ளிகளை அமைக்கவேண்டும் என்று ஆக்கப்பணித் திட்டம் அமைக்கவும், வரி செலுத்தாமலும், சட்டமன்றம், நீதிமன்றம் ஆகியவற்றைப் புறக்கணித்தும் அரசுப் பணிகளில் விலகியும் ஒத்துழையாமல் இருக்கவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் காங்கிரசின் தலைவர்களில் ஒருவராய் இருந்த அன்னிபெசன்ட் இதனை ஆதரிக்கவில்லை; வெளிப்படையாகவும் கண்டித்தார். ஒத்துழையாமை இயக்கத்தின்போது பள்ளிகளிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் மாணவர்கள் வெளியேறினர். வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் புறக்கணித்தனர். அவர்களில் இராஜாஜி தமிழ்

நாட்டில் குறிப்பிடத்தக்கவர். பின்னர் இவர் முழுநேர அரசியல்வாதியானார். 1920 ஜூனில் மத்திய கிலாபத் இயக்கத்திலும் இவர் கலந்துகொண்டார்.

1919-ல் காங்கிரசில் சேர்ந்த ஈ. வெ. ரா. வும் இந்திய தேசிய காங்கிரசின் விடுதலைப் போராட்டத்தில் தீவிரம் காட்டினார். ஜாலியன் வாலாபாக் படுகொலையை எதிர்த்து இவரும் நகராட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகினார். அதோடு தாம் நடத்திய வணிகத்தையும் புறக்கணித்துவிட்டு காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குகொண்டார். இவ்வியக்கம் வெற்றிபெறத் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணமும் மேற்கொண்டார். அதுபோல மதுவிலக்குப் போராட்டத்திலும் தீவிரம் காட்டினார். 1921-ல் ஈரோட்டில் கள்ளுக்கடைகள்முன் மறியல் செய்து சிறைசென்றார். இவ்வாறு தமிழகம் எங்கும் ஒத்துழையாமை இயக்கம் மிகத் தீவிரமாக இருந்ததால், அரசு பல தலைவர்களையும் தொண்டர்களையும் கைது செய்து சிறையிலிட்டது.

## 3. சீமைத் துணி எரிப்புப் போராட்டம்

இந்திய மக்களிடையே காணப்படும் கொந்தளிப்பை அறிந்த அரசு, மக்களிடம் நல்லுறவு ஏற்படுத்த முயன்றது. அதற்கு இங்கிலாந்து அரசு வேல்ஸ் இளவரசரை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தது. 1921-ல் அவர் இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது. 1921-ல் அவர் இந்தியாவிற்கு வருகைபுரிந்தார்; தங்களின் எதிர்ப்பை மேலும் வெளிப்படுத்தவும் அவரை வரவேற்பதை மறுக்கவும் இங்கிலாந்து நாட்டுத் துணிகளைத் தெருவில் கொண்டுவந்து போட்டு சீமைத் துணிகளை எரிக்கும் போராட்டத்தை நாடு முழுவதும் நடத்தினர். 1922ல் ஜனவரி 13ல் இளவரசர் வந்தபோது பெரும் கிளர்ச்சி நடைபெற்றது. போலீஸ் துப்பாக்கிக்கு இருவர் பலியாயினர். தூத்துக்குடியில் வ. உ. சிதம்பரனார் தலைமையில் சீமைத் துணிகள் எரிக்கப்பட்டன. ஆனால் அப்போராட்டம் வன்முறையாக மாறுவதைக் காந்தியடிகள் அறிந்தார். மேலும் தமிழகத்தில் நீதிக்கட்சி போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. ஆதலால் ஒத்துழையாமை இயக்கத்தைச் சில காலம் தள்ளிவைத்தார்.

### செய்தித் தாள்கள்

இச் சமயத்தில் தமிழ்நாட்டில் செய்தித்தாள்களின் பங்கு விடுதலைப் போராட்டத்தை மேலும் வலுப்படுத்தியது. சுதந்திர

Scanned with CamScanner

மித்திரன், சுதந்திர சங்கு, ஜெயபாரதி, வந்தேமாதரம், நேஷனல் டைம்ஸ் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. சுதந்திர நாதம், தேச பக்த கீதம் போன்ற பாடல் தொகுப்புகளை அச்சிட்டு வெளியிட்டனர்.

தேசியப்பற்றை வளர்க்க 1925 ஏப்ரல் 6 முதல் 12 வரை 'தேசியவாரத்'தைத் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி கொண்டாடியது. அப்பொழுது பல பொதுக் கூட்டங்களை நடத்தித் தியாகிகளின் செயல்களைப் பாடல்களாகவும் பாடினர்.

## 4. சைமன் குழுவிற்கு எதிர்ப்பு

1927-ல் பிரிட்டிஷ் அரசின் இரட்டை ஆட்சியின் திறபற்றி அறிய ஒரு குழுவை அரசு நியமித்திருந்தது. ஆனால் அக்குழுவில் அனைவரும் வெள்ளையரே! சர் ஜான் சைமன் தலைமையில் வந்த அக் குழுவை எதிர்த்துச் சென்னையில் கிளர்ச்சி செய்ய முடிவு செய்யப்பட்டது. சென்னையில் சத்தியமூர்த்தி தலைமையில் சைமன் புறக்கணிப்புப் பிரச்சாரக்குழு கிளர்ச்சி நடத்த முடிவு செய்தது. கடையடைப்பு, கல்விச் சாலைகள் புறக்கணிப்பு, அரசுப் பணியை விலக்குதல் முதலியன செய்வதோடு, புறக்கணிப்பு என்ற எழுத்துடன்கூடிய கொடியைத் தேசியக் கொடியுடன் ஏற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர் 1929 பிப்ரவரி 18-ல் சைமன் குழு சென்னை வருவதாக இருந்தது. அதற்கு முன்தினம் முக்கியத் தலைவர்களை வீடுபுகுந்து அரசு கைது செய்தது. அதேசமயம் நீதிக் கட்சியினர் அக்குழுவை வரவேற்க முன்வந்தனர். அக் கட்சியைச் சார்ந்த L, ராமசாமி முதலியார் குழுவை வரவேற்றுப் பேசினார். ஆனால் தேசிய வாதிகள் பயங்கரக் கிளர்ச்சி செய்தனர். அதனை அடக்கும் பொழுது பலர் மண்டை உடைந்தது, குருதி வெள்ளம் பெருக்கெடுத்தது. அதனால் குழு சென்ற இடமெல்லாம் மேலும் போராட்டம் தொடர்ந்தது.

## 5. உப்பு சத்தியாக்கிரகம்

இந்தியா எந்த அளவு சுயாட்சிக்குத் தகுதி உடையது என்பதை அறிய 1927-ல் சைமன் குழு இந்தியாவிற்கு வருகை புரிந்தது. அதனை இந்தியத் தலைவர்கள் புறக்கணித்தனர். அதே ஆண்டு சென்னையில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் பரிபூரண சுதந்திரம் அடைவதையே தங்களது குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்று முடிவெடுக்கப் பட்டது. மேலும் 1929 டிசம்பருக்குள் டொமினியன் அந்தஸ்து

வழங்கப்பட்டால் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், அது மறுக்கப்பட்டுவிட்டால் சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவெடுத்தனர். ஆங்கில அரசு எந்தவித முடிவும் கூறவில்லை. சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பமானது. 1930 மார்ச்சில் இவ்வியக்கத்தின் ஒரு தொடராக உப்பு வரியை எதிர்த்து உப்பு சத்தியாக்கிரகத்தைக் காந்தியடிகள் தொடங்கினார். ஏப்ரல் மாதம் 6-ம் தேதி நாட்டின் அனைத்துக் கடற்கரைப் பகுதிகளிலும் உப்புக் காய்ச்சுதல் நடைபெற்றது; தமிழகத்தில் இராஜாஜி தலைமையில் ஆயிரக்கணக்கான மக்களின் ஆதரவுடன் வேதாரண்யத்தில் உப்புக் காய்ச்சப்பட்டது. அதேபோன்று உப்பளங்களும் முற்றுகைக்குள்ளாயின. இதற்கு வேதாரண்யத்தைச் சார்ந்த வேதரத்தினம் என்ற செல்வந்தர் மிகத் தீவிரம் காட்டினார். அதனால் அவருடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர் சிறிதும் சளைக்கவில்லை! மக்களும் மனம் மாறவில்லை. தொடர்ந்து சில மாதங்கள் வேதாரண்யத்தில் உப்புக் காய்ச்சப்பட்டது. நாமக்கல் கவிஞரின் கத்தியின்றி ரத்தமின்றி என்ற பாடல் அப்பகுதியில் வழிநடைப் பாட்டாக அமைந்தது. வேதாரண்யத்தின் தீவிரம் பிற பகுதி இந்தியரைத் தூண்டும் இயக்கமாக அமைந்தது என்பதை மறுக்கமுடியாது.

## 6. சட்ட மறுப்பு இயக்கங்கள்

நாடு முழுவதும் சட்டமறுப்பு இயக்கம் தீவிரமாக இருந்தது. அரசின் முயற்சிகள் பலனளிக்கவில்லை. சமரச முயற்சி மேற்கொள்ளபபட்டது. 1931-ல் ஏற்பட்ட காந்தி இர்வின் ஒப்பந்தப்படி இவ்வியக்கம் நிறுத்தப்பட்டது. காந்தி வட்ட மேஜை மாநாட்டில் கலந்துகொள்ள இலண்டன் சென்றார்; ஆனால் பேச்சுவார்த்தையில் பலனில்லை; இந்தியா திரும்பினார். அவர் திரும்புமுன்னரே மீண்டும் 1932-ல் சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பமானது; கள்ளுக் கடைகளின் முன் மறியல் செய்த மக்கள் தடியடிக்கு ஆளாயினர். தமிழகத்தில் நடைபெற்ற தடியடியில் எட்டுத் தொண்டர்கள் மயங்கினர். ஆங்கிலேயர் வெறிகொண்டு அவர்களைத் தண்ணீர்விட்டுத் தெளிவித்து மீண்டும் அடித்தனர். அதுபோலப் போலீஸ் தடியடி இராமநாதபுரத்திலும் நடைபெற்றது. B.L.N.K. ரெட்டி என்ற செல்வந்தர் கூட்டத்தில் நின்றுகொண்டிருந்தார். அப்பொழுது நடைபெற்ற தடியடியில் அவரது காலை மடக்கமுடியாமல் அடித்து முட்டியை உடைத்தனர். சிறு குழந்தைகள்கூடத் தடியடிக்குள்ளாயினர். அதுபோல மதுரையில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியலில் ஒரு சலவைத் தொழிலாளியை ஒரு போலீஸ் அதிகாரி அடித்ததோடு,

அவரை வீட்டிற்குள் அழைத்துச் சென்று மீண்டும் அடித்து, அவரது தலையில் மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்தார். அவரது தலையெல்லாம் புண்ணாகிவிட்டது.

## 7. வெள்ளையனே, வெளியேறு !

1939-ல் இரண்டாம் உலகப்போரில் பிரிட்டன் இறங்கியது. அது இந்தியத் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் இந்தியாவையும் போரில் ஈடுபடுத்தியது ; இதனை இந்தியத் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்தனர். அனைத்து மாநிலங்களிலிருந்த காங்கிரஸ் அமைச்சரவைகள் இராஜினாமா செய்தன. அப்பொழுது சென்னை மாநிலத்தில் இராஜாஜி தலைமையிலிருந்த அரசும் பதவி விலகியது. இரண்டாம் உலகப்போரின் உச்சக்கட்டம் வந்தது ; இந்தியர்கள் உதவி மிகவும் தேவைப்பட்டதால், இந்துக்களும் முஸ்லிம்களும் ஓர் சமரச உடன்பாட்டுக்கு வந்தால், இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்குவதில் தடை இருக்காது என்ற பிரிட்டன் திட்டவட்டமாகக் கூறியது ; அதனைக் கருத்தில் கொண்ட இராஜாஜி, முஸ்லிம்களுக்குத் தனி நாடு பிரித்துக் கொடுத்துவிடுவது நல்லது என்று காங்கிரசிற்குத் தெரிவித்தார். 1942 ஏப்ரல் 3-ம் நாள் இராஜாஜி தம்முடைய காங்கிரசு சட்டசபையிலிருந்த ஆதரவாளர்களை ஒன்றுகூட்டி, காங்கிரசின் மேலிடத்திற்கு இரண்டு முக்கிய முடிவுகளை ஏற்கத் திட்டம் வகுத்தார். அதன்படி (1) பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, காங்கிரஸ் முஸ்லிம் லீக்குடன் சமரசம் செய்துகொள்ளவேண்டும் ; (2) மீண்டும் சென்னை மாநிலத்திற்குப் பொறுப்பாட்சியை ஏற்படுத்தவேண்டும்.

ஆனால் இராஜாஜியின் முதல் கோரிக்கை அகில இந்திய காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் தோற்கடிக்கப்பட்டது. அதே ஆண்டு ஏப்ரல் 30-ல் காங்கிரசிலிருந்து இராஜாஜி வெளியேறினார்.

1942 ஆகஸ்ட் 8-ல் பம்பாயில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் குழுக் கூட்டத்தில், வெள்ளையர்கள் வெளியேற வேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அன்று இரவே காந்தியடிகளும், மற்ற முக்கியத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். காங்கிரசும் சட்டவிரோதமானது என்று கூறப்பட்டது; இந்தியா முழுவதும் கடையடைப்புகளும் கிளர்ச்சிகளும் நடைபெற்றன ; அரசு வன்முறையில் அவர்களை அடக்கியது.

## 8. கோவையில் பெரும் புரட்சி

1942-ல் தமிழகத்தில் கோவையில் பெரும் கிளர்ச்சி நடைபெற்றது. கோயம்புத்தூரிலிருந்து ஆங்கிலேயரின் இராணுவ விமான நிலையத்தை மக்கள் தீயிட்டனர்; அதனால் ஆத்திரமடைந்த போலீசார், அப்பகுதியின் அருகிலிருந்த கிராமங்களில் வாழும் ஆண்கள் அனைவரையும் பிடித்து ஒரு கொட்டடியில் மாடுகளைப் பட்டியில் அடைப்பதுபோல ஒரு வாரம் அடைத்து வைத்தனர். மேலும் கிளர்ச்சியாளர்கள் கோவைக்கருகிலிருந்த ஒரு இராணுவ முகாமைத் தீயிட்டனர். 200 டாங்கிகளையும் நாசப்படுத்தினர். அப்பொழுது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 30 பேர்கள் உயிரிழந்தனர். தமிழகத்திலிருந்த ஆலைகள் அனைத்திலும் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. கல்விச்சாலைகளிலிருந்து மாணவர்கள் வெளியேறினர்.

## 9. திருவாடானையில் கொடுமை

இராமநாதபுரமும் இவ்வியக்கத்தில் தீவிரம் கொண்டது. திருவாடானைக் காவல் நிலையத்தை மக்கள் முற்றுகையிட்டு, அதனைக் கைப்பற்றிக்கொண்டனர். அங்கிருந்த உள்ளூர் சிறைச்சாலையைத் தாக்கிப் பூட்டை உடைத்துக் கைதிகளை விடுவித்தனர். அதனை அடக்க இராணுவம் வந்தது; வன்முறையால் நசுக்கியது. இராணுவத்தினர் கிராமங்களுக்குத் தீ வைத்தனர். வீடுகளைச் சூறையாடினர்; பெண்களைக் கற்பழித்தனர்; சில பெண்களை நிர்வாணமாக்கி மரங்களில் கட்டிச் சாகும்வரை சாட்டையால் அடித்தனர். இதுபோன்ற கொடுமை சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்தியாவில் வேறு எங்கும் நடைபெறவில்லை.

உலகையே கலங்கவைத்த இரண்டாம் உலகப்போர் 1945-ல் முடிவடைந்தது. இந்தியாவில் உயர்ந்து எழுந்து மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிய சுதந்திரத் தீ மெல்ல மெல்ல அணைய ஆரம்பித்தது. 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்று ஏங்கிய மக்களுக்கு இன்பத்தேன் வந்து காதில் பாயும்படி சுதந்திரப் பேச்சுவார்த்தை தொடங்கியது. 1947-ஆகஸ்டு 15ஆம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்தது. "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே; ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று," மக்கள் ஆனந்த வெள்ளத்தில் திளைத்தனர்.

Scanned with CamScanner

# 65. வ.உ.சிதம்பரனார்

## (V.O.CHIDAMBARANAR)

'கப்பலோட்டிய தமிழன்' என்று புகழப்படும் வ.உ.சிதம்பர இந்திய விடுதலைப் போர் தமிழ் நாட்டில் வேகமாகப் பரவிட முக்கி காரணம் ஆவார். தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஓட்டப்பிடா என்ற சிற்றூரில் 1872, செப்டம்பர் 5-ம் தேதி பிறந்தார். 1895-ல் திருச்சி வழக்கறிஞர் பட்டம் பெற்றுத் தூத்துக்குடியில் வழக்கறிஞ தொழில் நடத்தி வந்தார். இளமையிலேயே தேசிய உண கொண்டவராகவும், விடுதலை வேட்கை நிறைந்தவராக காணப்பட்டார். பாலகங்காதர திலகரின் தீவிர கருத்துக்கள் இவ கவர்ந்தன. தமிழ்நாட்டில் திலகரின் கருத்துக்களைப் பரப்பின எனவே 'தென்னாட்டு திலகர்' என்று வ.உ.சி. போற்றப்பட்டார்.

### சுதேசி இயக்கத்தில் வ.உ.சி

1906-ல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் ஆங்கில பொருட்களைப் புறக்கணித்து இந்தியப் பொருட்களையே பயன்படுத் வேண்டும் என்ற தீர்மானத்தை திலகர் இயற்றினார். இதற்கு சுதே இயக்கம் என்று பெயர். இந்த சுதேசி இயக்கம் நாடெங்கிலும் பரவி தமிழ் நாட்டில் இந்த இயக்கத்தை தீவிரப்படுத்தியவர் வ.உ.சி ஆவ வழக்கறிஞர் தொழிலை உதறிவிட்டு போராடினார். இவர் சுதே பொருட்களுக்கு ஆதரவு திரட்டுவதற்காக தூத்துக்குடியில் 'தரும ச நெசவு சாலையும்', 'சுதேசி பண்டக சாலையையும்' நிறுவினார். "தமி

Scanned with CamScanner

அன்சன்ஸ் கௌரவச் செயலாளர்களாகவும், சிதம்பரனார் துணைச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

முதலில் கப்பல்களை வாடகைக்குப் பிடித்தார். பின்பு பம்பாய்க்குச் சென்று 'கலியா' என்ற புதிய கப்பல் வாங்கினார். பிரான்சுக்குச் சென்று 'லாவோ' என்ற மற்றொரு கப்பல் வாங்கினார். இந்த இரண்டு கப்பல்களிலும் தூத்துக்குடி வணிகர்கள் சரக்குகளை ஏற்றினர். "நாம் எல்லோரும் சேர்ந்து பலமாக மூச்சு விட்டால் போதுமே! அம்மூச்சுக் காற்றில் பறந்து போய்விடும் வெள்ளையர் ஆதிக்கம்; நான் ஆரம்பித்துள்ள இக்கம்பெனியும், வாங்கியுள்ள கப்பல்களும் வெள்ளையர்களை இந்த நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கே ஆகும்" என்று வ.உ.சி. முழங்கினார். இவருடன் சுப்பிரமணிய சிவா என்பவரும் சேர்ந்து நாட்டுப்பற்றை மக்களுக்கு ஊட்டினார்.

வ.உ.சி-யின் புதிய கப்பல் கம்பெனியால் வெள்ளையர்களுக்கு வருவாய் குறைந்தது. அவர்கள் போட்டிக்காக வேண்டுமென்றே குறைந்த கட்டணம் வசூலித்தார்கள். இப்படிப் பழி வாங்கும் போட்டிகளாலும், அரசாங்க அதிகாரிகளின் கெடுபிடிகளாலும் சிதம்பரனாரின் சுதேசி கப்பல் கம்பெனி வியாபாரத் துறையில் வெற்றி பெற இயலவில்லை. ஆனாலும் இவரது செயல் செயற்கரிய செயலாக மற்றவர்கட்கு வழிகாட்டியாக, தமிழர்களின் உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதாக அமைந்தது.

## தொழிலாளர்களின் தலைவர் வ.உ.சி

அரசியல் விழிப்புணர்ச்சி, மாணவர்களிடமும் தொழிலாளர்களிடமும் பரவியது. 1908 பிப்ரவரி மாதத்தில் சுப்பிரமணிய சிவாவும் வ.உ.சியும் ஆற்றிய சொற்பொழிவுகள் தூத்துக்குடி 'கோரல்மில்' தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கு முக்கிய தூண்டுகோலாக அமைந்தன. ஆங்கிலேயருக்குச் சொந்தமான இந்த ஆலையில் பாதிக்கு மேற்பட்டோர் சிறுவர்களாக இருந்தனர். பணிச்சூழல் மிகவும் பாழ்பட்ட நிலையில் காணப்பட்டது. ஆலையின் உட்புறத்தில் காற்று நச்சுத்தன்மை பொருந்தியதாக இருந்தது.

எனவே 1908, பிப்ரவரி 27-ல் கோரல் ஆலைத் தொழிலாளர்கள் 1695 பேரும் சுற்றுச்சூழல் தூய்மைக்காகவும், ஊதிய உயர்வுக்காகவும் பணிநேரக் குறைப்பிற்காகவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த தொழிலாளர் போராட்டத்திற்கு வ.உ.சி-யும், சிவாவும் தலைமை தாங்கினர். அப்போதைய தூத்துக்குடி சப்-கலெக்டர் ஆஷ் சிதம்பரனாரை வரச்செய்து வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற

விட்டால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்று எச்சரித்தார். ஆனால் போராட்டம் தொடர்ந்தது. தொழிலாளர் மீது மக்களிடம் அனுதாபம் ஏற்பட்டது. பல துயர் துடைப்பு மையங்கள் தூத்துக்குடியில் அமைக்கப்பட்டன.

இறுதியில் ஆலை நிர்வாகம் பணிந்தது. வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர் 50 பேருடன் ஆலை மேலாளரைச் சந்தித்தார் வ.உ.சி. பேச்சுவார்த்தையின் விளைவாக தொழிலாளர் ஊதியம் உயர்த்தப்பட்டது. வேலை நேரம் குறைக்கப்பட்டது. தொழிலாளர்களின் இந்த வேலை நிறுத்தம் காரணமாக அவர்களிடம் அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டது. சிதம்பரனாரின் உரிமைப் போராட்டம் வெற்றியடைந்தது.

## தேசபக்தர் வ.உ.சி

வ.உ.சி. தமிழ் நாட்டில் ஊர் ஊராகச் சென்று மக்களிடம் விடுதலை உணர்வை ஊட்டினார். இவர் எப்பொழுதும் நாடு, சுதந்திரம் இவற்றைத் தவிர வேறு எதையும் நினைக்காதவர். "நான் வழிபடும் தெய்வம் பாரத மாதா; எனது சாதி பாரத சாதி; எனது வேலை தேச சேவை" என்றார். "அரசியலே எனது வாழ்க்கை! சுதந்திரமே எனது மோட்சம்" என்று கூறினார். இதுநாள் வரை நாம் அடிமையெனும் சிறையில் அடைபட்டிருந்தோம். சட்டம் எனும் விலங்கு பூட்டப்பட்டிருந்தது. ஒன்றுபட்ட ஐக்கிய சக்தியால் அதனைத் தகர்த்தெறிவோம் என்று முழங்கினார் தேசபக்தர் வ.உ.சி.

## செக்கிழுத்த செம்மல் வ.உ.சி

பரோடாவில் பேராசிரியராகப் பணிபுரிந்த அரவிந்த கோஷ் தனது பதவியை உதறித் தள்ளி விட்டு, தனது எழுத்துக்கள் மூலம் நாட்டு மக்களிடம் சுதந்திர உணர்ச்சியை ஊட்டி வந்தார். அதனால் அவர் மீது வழக்குப் போட நினைத்தது அரசு. ஆங்கிலேயருக்கு ஆதரவாக இந்த வழக்கில் சாட்சி சொல்ல மறுத்த வங்காளத்தைச் சேர்ந்த விபின் சந்திர பாலருக்கு நீதிபதி ஆறுமாதத் தண்டனை அளித்தார். ஆறுமாத சிறைவாசம் முடிந்து 1908, மார்ச் 9-ல் விபின் சந்திரபாலர் விடுதலை அடைந்தார். இந்த விடுதலை தென்னிந்தியா முழுவதிலும் கொண்டாடப்பட்டது. சென்னையில், சென்னை ஜனசங்கம், பாரத பந்தர், சுதேசிவஸ்து பிரச்சாரச் சபை, சுதேசி லீக், சாரதா சங்கம் போன்ற அமைப்புகள் 'இந்தியத் தாய்க்கு வணக்கம்' செலுத்தின. அவ்வாறே தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் விபின் சந்திரரின் விடுதலை நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

Scanned with CamScanner

இதற்கிடையில் பல இடங்களில் ஆற்றிய தேசிய எழுச்சி உரைகளை முன்வைத்து வ.உ.சியைக் கைது செய்வதற்கான ஆயத்தங்கள் மார்ச் 8-ம் தேதி அன்றே செய்யப்பட்டன. வ.உ.சிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு மார்ச் 9-ம் தேதி நெல்லை மாவட்ட நீதி மன்றத்திற்கு வரவழைக்கப்பட்டார். மாலை 7 மணி அளவில் ஒட்டப்பிடாரத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் வ.உ.சி ஆங்கில அரசைத் தாக்கிப் பேசினார். மார்ச் 10-ம் தேதி சுப்பிரமணிய சிவா, வ.உ.சி ஆகியோர் தூத்துக்குடி திரும்பினர். அன்று காலை தடை உத்தரவை மீறி ஊர்வலம் ஒன்று கடற்கரை ஓரம் நடைபெற்றது. இவற்றைக் கண்டு பொறுக்கமாட்டாத மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட நீதிபதியுமான விஞ்ச் மார்ச் 12-ல் வ.உ.சி. மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொண்டு அவரைக் காவலில் வைத்தார்.

இதனையடுத்து மார்ச் 13-ல் திருநெல்வேலியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் பெரும் கலவரம் நடைபெற்றது. எல்லாக் கடைகளும் பள்ளிகளும் மூடப்பட்டன. நகரில் எந்தப் பணியும் நடைபெறவில்லை. திருநெல்வேலியில் விஞ்சும், தூத்துக்குடியில் ஆஷ்ம் துப்பாக்கிச் சூடு நடத்தி கலவரத்தை அடக்க முற்பட்டனர். இதில் நான்கு பேர் இறந்தனர். சிதம்பரனார் மீது சுப்பிரமணிய சிவாவுக்கு உடந்தையாக இருந்ததாகவும், அரசு நிந்தனைக் குற்றம் செய்ததாகவும் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. விசாரணை, மாவட்ட கூடுதல் நீதி மன்றத்தில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி ஆர்தர் பின்ஹே வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கினார். சுப்பிரமணிய சிவாவுக்கு பத்தாண்டு காலம் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்.

இந்தத் தீர்ப்பைக் கேட்ட மக்கள் துடிதுடித்தனர். பத்திரிக்கைகள் கண்டனம் செய்தன. சிதம்பரனாரின் இளைய சகோதரர் மீனாட்சி சுந்தரத்துக்கு அதிர்ச்சியினால் புத்திசுவாதீனம் இல்லாமல் போய்விட்டது. குணமடையாமலேயே 1943-ல் உயிர் நீத்தார். 1908, அக்டோபரில் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தார் வ.உ.சி. அதை விசாரித்த நீதிபதிகள் ஆயுள் தண்டனையை ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனையாகக் குறைத்தனர். வ.உ.சி முதலில் கோவை சிறையிலும், பின்னர் கண்ணனூர் சிறையிலும் அடைக்கப் பட்டார். இவ்வாறு 1908-ம் ஆண்டு அரசியல் முக்கியத்துவம் பெற்ற ஆண்டாக விளங்கியது. சென்னை ஒரு இருண்ட மாநிலமாகும் என்ற பெயரை மாற்றியமைத்த எழுச்சிமிக்க ஆண்டாகும். அந்த எழுச்சிக்குக் காரணம் தலைமகன் வ.உ.சி ஆவார்.

சிறையில் வ.உ.சி பட்ட துன்பங்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. சிறையதிகாரிகள் கொலைக் குற்றவாளிகளிடம் காட்

...மிகச் சிறிய இரக்க உணர்வைக் கூட வ.உ.சியிடம் காட்டவில்லை. 1908 நவம்பர் 28-ம் தேதியிட்ட 'இந்தியா' இதழில் சிறைக் கொடுமைகளைப் பற்றி பாரதியார் எழுதினார். சிறைக் கொட்டடியில் மண் சட்டியில் புளித்த நாற்றமெடுத்த கேள்வரகுக் கூழ் குடித்தார். கல் உடைத்தார். மாவு அரைத்தார். மேலும் சிறையில் எண்ணையாட்டும் செக்கில் மாடுகளுக்குப் பதிலாக சிதம்பரனாரை இழுக்க வைத்தனர். இத்தனை துன்பங்களுக்கிடையிலும் வ.உ.சியின் உள்ளம் மட்டும் பாரதத் தாயின் அடிமை விலங்குகள் எப்போது உடையும், இந்தியர் எப்போது சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பர் என்றே சிந்தித்துக் கொண்டிருந்தது.

ஜார்ஜ் மன்னர் அரியணை ஏறியதால் அதையொட்டி சிறைத் தண்டனை குறைக்கப்பட்டு 1912 டிசம்பர் மாதம் கண்ணனூர் சிறையில் இருந்து வ.உ.சி. விடுதலை செய்யப்பட்டார். மீண்டும் கலகங்கள் தோன்றா வண்ணம் வ.உ.சியை தனிமைப்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொண்டது. அவர் திருநெல்வேலி மாவட்டத்தில் தங்க அனுமதிக்கப்படவில்லை. எனவே சென்னையில் தங்கினார்.

## விடுதலை செய்யப்பட்ட பிறகு வ.உ.சியின் நடவடிக்கைகள்

1912-ம் ஆண்டின் அரசியல் சூழ்நிலை மிகவும் மாறுபட்டிருந்தது. காங்கிரஸ் நிறுவனம் முற்றிலும் மிதவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. முதல் உலகப் போர் துவங்கிய போது அன்னிபெசன்ட் அம்மையாரின் தீவிர அரசியல் ஈடுபாடு வ.உ.சிக்கு சந்தேகத்தை அளித்தது. அவரது நடவடிக்கைகள் அரசின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட நாடகமாகவே கருதினார். காங்கிரசிலிருந்த பிராமணர் அல்லாதவர்கள் ஏற்படுத்திய 'சென்னை மாநில சங்கத்தின்' உறுப்பினரானர் வ.உ.சி. இதன் முதல் கூட்டம் 1917, செப்டம்பர் 20-ல் சென்னையில் நடைபெற்றது.

1918 ஏப்ரல் 27-ல் சென்னையில் 'சென்னை தொழிலாளர் சங்கம்' தோற்றுவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பல்வேறு தொழிற் சங்கங்கள் தோன்றின. இந்த தொழிலாளர் சங்கங்களுக்கு அடிகோலுவதில், தோற்றுவிப்பதில் முக்கியமானவராக வ.உ.சி திகழ்ந்தார். அத்துடன் காங்கிரஸ் நிகழ்ச்சிகளிலும் முழுமையாகப் பங்கெடுத்துக் கொண்டார். பாலகங்காதர திலகரால் பூனாவில் தோற்றுவிக்கப்பட்ட 'சுயாட்சி சங்கத்தின்' கிளை ஒன்றை 1919 பிப்ரவரி 19-ல் சுப்பிரமணிய சிவாவுடன் சேர்ந்து சென்னையில் நிறுவினார் வ.உ.சி. ரௌலட் சட்டத்தை எதிர்த்து நாடெங்கும் கூட்டம் நடைபெற்றன. 1919 மார்ச் மாதம் சென்னையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தமிழில் உரையாற்றினார் வ.உ.சி. மகாத்மா

காந்தியின் கீழ் யாவரும் ஒன்றுபட்டு செயல்பட்டால் சுதந்திரம் நிச்ச கிடைக்கும் என்று வ.உ.சி. முழங்கினார்.

1919 பிப்ரவரியில் சென்னையில் டிராம் வண்டி வேலை நிறுத்த தொடங்கியது. வேலை நிறுத்தத்தை எவ்வாறு வெற்றிகரமாக நடத்தி செல்ல வேண்டும் என்பதற்கான ஆலோசனை வழங்கியதுட தொழிலாளர் மத்தியில் அவ்வப்போது உரையும் ஆற்றினார். மேலு மே மாதம் 2-ம் தேதி "தென்னக மற்றும் மராத்தா இருப்புப் பாதை பணிமனைத் தொழிலாளர் சங்கம்" அமைக்கப் பெருதவியாக இருந்தா 1920 ஜூன் 21-ல் காங்கிரசின் இருபத்தி ஆறாவது மாநில மாநா திருநெல்வேலியில் தொடங்கியது. அதில் வ.உ.சி இரண் தீர்மானங்களை முன்மொழிந்தார். அதில் ஒன்று தொழிலாள சங்கங்களைப் பற்றியதாகும்.

காந்திஜியின் அறப் போராட்டத்திற்கு வ.உ.சி ஆதரவளித்தாலும் அவரது ஒத்துழையாமை இயக்கத்தை கடுமையா எதிர்த்தார். ஒத்துழையாமை மக்களிடம் கோழைத் தன்மையை உருவாக்கும் என்றார் வ.உ.சி. 1920-ல் கல்கத்தாவில் கூட்டப்பட்ட அகி இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் ஒத்துழையாமை கொள்கைக் எதிரான ஆதரவுகளைத் திரட்டினார் வ.உ.சி. இவ்வாறு கொள்கை ரீதியாக காங்கிரசிலிருந்து வேறுபட்டதால் கட்சிப் பணியி ஈடுபடுவதைக் குறைத்துக் கொண்டார். ஆனாலும் தொழிற் சங்க பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

சிறை சென்று வந்தபின் வ.உ.சியின் அரசியல் வாழ்வின் புதி பிக்கப்பட்ட தீவிர ஈடுபாடு அரசாங்கத்தைக் கோபத்தில் ஆழ்த்திய எனவே கோயம்புத்தூர் மில் தொழிலாளர்களிடையே 1921 நடைபெற்ற வேலை நிறுத்தங்களுக்கு வ.உ.சி அங்கு சென்று வந்த காரணம் என்று கூறி அவர் மீது குற்றவியல் நடவடிக்கைகளை தொடர்ந்தது. சிதம்பரனார் பிணைத் தொகை கட்டி தன்னை மீட் கொண்டதால் அரசியல் வாழ்வில் அவருக்கு மேலும் இடையூ ஏற்பட்டது.

1923 ஜூன் 15-ல் சித்திரஞ்சன் தாசை தூத்துக்குடிக்கு அழைத் வந்து பாராட்டினார். 1924-ம் ஆண்டிலிருந்து மீண்டும் வழக்கறி தொழிலில் ஈடுபட்டார். 1927-ம் ஆண்டு நவம்பர் 5-ல் நடைபெ சேலம் மாவட்ட காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார் வ.உ இவர் பிற்கால வாழ்க்கையில் அரசியலில் தீவிர ஈடுபடாவிட்டாலும், காங்கிரஸ் மாநாடுகளில் பங்கேற்பது, பொது கூட்டங்களில் பங்கேற்பது போன்ற ஈடுபாடுகளை கடைசி மூச்சுவ கடைப் பிடித்தார்.

Scanned with CamScanner

## வ.உ.சியின் இறுதிக்காலம்

1936, நவம்பர் 18-ம் தேதி இரவு வ.உ.சி. இவ்வுலக வாழ்வை நீத்தார். சிறையிலிருந்து விடுதலை ஆனபின் வறுமையாலும், பிணியாலும் அல்லற்பட்டார் வ.உ.சி. தான் சாகும் போது கூட மற்றவர்களை தேச பக்தி பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டே இறந்தார். தியாகச் செம்மல் வ.உ.சி. நாடு விடுதலை அடைவதைப் பார்க்காமல் இறந்து போவது பற்றி மனம் வெதும்பினார். அவர் இறந்த பதினொரு ஆண்டுகள் கழித்து அவர் விரும்பியபடியே நாடு விடுதலையடைந்தது. 1950-ம் ஆண்டு தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் விடப்பட்ட கப்பலுக்கு அப்போதைய கவர்னர் ஜெனரல் இராஜாஜி 'வ.உ.சிதம்பரம்' என்று பெயரிட்டு வ.உ.சியைக் கௌரவப்படுத்தினார். தூத்துக்குடியில் அவர் பெயரால் ஒரு பெரிய கல்லூரி தூத்துக்குடி மக்களால் நடத்தப்பட்டு வருகிறது.

# 66. சுப்பிரமணிய பாரதி

### (C.Subramania Bharathy, 1882-1921)

அந்நியர் ஆட்சி அகற்றப்பட்டு, தாய்நாடு விடுதலை பெற்று சுதந்திர நாடாகத் திகழ வேண்டும் என்ற சுதந்திர வேட்கை கொண்டவர் மகாகவி சுப்பிரமணிய பாரதி ஆவார். இவர் மக்களால் பாரதியார் என்று பெருமையுடன் அழைக்கப்பட்டார். இவரது எழுதுகோல் வாளைவிட சக்தி மிக்கது, காலத்தை வென்றது. புதிய போர்ப் படையைப் படைத்த கவித்தளபதி பாரதி ஆவார். நாட்டையே சிந்திக்க வைத்த சிந்தனையாளர். பாண்டிச்சேரியில் இருந்து கொண்டு சுதந்திரத் தீயை மூட்டும் கட்டுரைகள், பாடல்கள் எழுதி மக்களிடையே சுதந்திர தாகத்தை வளர்த்தவர் பாரதி. இந்திய சுதந்திரப் போரில் ஒரு பார்வையாளராக இருக்காமல் அதில் பங்கேற்ற போராளி பாரதியார் ஆவார்.

## பாரதியாரின் வாழ்க்கைக் குறிப்பு

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயர், இலட்சுமி அம்மாள் ஆகியோருக்கு மகனாக 1882 டிசம்பர் 11-ம் தேதி பிறந்தார். சுப்பிரமணியன் என்ற பெயர் கொண்ட பாரதியார் தனது பள்ளிப் படிப்பை தொடராமல் வீடு திரும்பினார். 1897-ல் இவருக்கும் செல்லம்மாள் என்ற ஏழே வயது நிரம்பிய

சிறுமிக்கும் திருமணம் நடைபெற்றது. இளம் பருவத்திலேயே கவிதை புனையும் ஆற்றல் கொண்டிருந்தார். எனவே தான் இவரது கவிதை புனையும் திறமையைப் பாராட்டி 'பாரதி' என்ற பட்டம் வழங்கப்பட்டது. இந்தப் பெயரே இறுதிவரை நிலைத்து நின்றது.

## விடுதலைப் போராட்டத்தில் பாரதியார்

### a) வங்கப் பிரிவினைப் போராட்டத்தில் பாரதியார்

1905-ல் தான் பாரதியார் அரசியல் மேடையில் ஏறினார். வங்கத்தை இரு மாநிலங்களாகப் பிரிக்க ஆங்கில அரசு செய்த முடிவை எதிர்த்து நாடெங்கிலும் கிளர்ச்சி எழுந்தது. வங்கத்தில் தீவிர தேசியவாதிகள் ஆயுதமேந்திப் போராடினர். இந்தப் போராட்டமே சுதேசி இயக்கமாக வலுவடைந்தது. சென்னை கடற்கரையில் அப்போது நடந்த கூட்டம் ஒன்றில் 'வங்கமே வாழிய' என்ற பாடலை பாரதி பாடினார். இதுதான் பாரதியின் முதல் சுதந்திர முழக்கமாகும். அப்போது சுதந்திர இயக்கம் நாட்டின் பல பகுதிகளில் பரவாமல் இருந்தது. சுயநலம் இல்லாதவர்கள், தியாக குணம் படைத்தவர்கள், அரசின் அடக்குமுறையைக் கண்டு அஞ்சாதவர்கள் ஆகியோர் தாமே தாமாகவே முன்வந்து போராட்டங்களில் பங்கெடுத்தனர்.

### b) காங்கிரஸ் மாநாடுகளில் பாரதியார்

சென்னைக் கூட்டத்தில் பாடிய பிறகு 1905-ல் காசியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றார் பாரதி. அங்கு திலகரைப் பார்க்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. 1906-ல் சென்னையில் 'பால பாரதசபை' என்ற சங்கத்தை அமைத்தார். சென்னையில் திலகர் பிறந்த நாளை கொண்டாடுவதில் பாரதி பங்காற்றினார். 1906-ல் தான் பாரதிக்கும் வ.உ.சிக்கும் நேரடி தொடர்பு ஏற்பட்டது. 1907-ல் விஜயவாடாவுக்குச் சென்று விபின் சந்திரபாலரை சென்னைக் கூட்டத்தில் பேச அழைத்து வந்தார் பாரதி. சென்னையில் ஐந்து கூட்டங்களில் பேசிய விபின் சந்திரபாலர் இந்தியாவுக்கு பூரண சுதந்திரம் வேண்டும் என்று முழங்கினார்.

1907-ல் சூரத் காங்கிரஸ் மாநாட்டில் வ.உ.சியுடன் சென்று கலந்து கொண்டார். சூரத் பிளவுக்குப் பின், தீவிரவாதிகளின் தலைவர் திலகரின் ஆதரவாளர் ஆனார் பாரதி. திலகரை ஆதரித்துப் பல கட்டுரைகளை எழுதினார். அரசுக்கு எதிரான அனல் கக்கும் பேச்சாளராகத் திகழ்ந்தார் பாரதியார்.

### c) சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஆதரவு

1908-ல் இலட்சுமணய்யா என்ற சுதந்திரப் போராட்ட வீரர் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட

...விடுதலையாகி வெளி வந்தவுடன் அவருக்குப் பாராட்டுக் கூட்டம் ...த்தி, பரிசு வழங்கினார் பாரதியார். 1911-ல் ஆஷ் கொலை வழக்கில் ...ட்டிக்கு எதிராகக் கலகம் செய்யத் தூண்டியதாகக் கைது செய்யப் ...டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த வ.உ.சியை நேரில் பார்த்து ...சிவிட்டு வந்தார். வ.உ.சி. கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ...த்தப்பட்ட கண்டனக் கூட்டங்களில் பாரதி பங்கு கொண்டு ...ட்சியாளர்களின் அநீதியைக் கண்டித்துப் பேசினார்.

### ...) பாண்டிச்சேரியில் பாரதியார்

'இந்தியா' பத்திரிக்கையில் பாரதியார் எழுதிய பல கட்டுரை ...ளுக்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கவும் பத்திரிக்கையை ...ழிக்கவும் காவல்துறை பாய்ந்தது. எனவே பாரதியார் 1908, ஆகஸ்ட் ...ல் காவல்துறை கண்ணில் படாமல் ரயில் ஏறி பாண்டிச்சேரி சென்றடைந்தார். 1908 முதல் 1918 நவம்பர் 24-ம் தேதி வரை பாண்டிச்சேரியில் அரசியல் தஞ்சம் அடைந்தவராக, ஆனால் சுதந்திர மனிதராக பாரதி வாழ்ந்து வந்தார்.

பாண்டிச்சேரியில் தங்கியிருந்த காலத்தில், அரவிந்தர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், சுத்தானந்த பாரதி ஆகியோருடன் தொடர்பு கொண்டிருந்தார். பாண்டிச்சேரியிலிருந்து 'இந்தியா' பத்திரிக்கையைத் தொடர்ந்து வெளியிட்டார். பாண்டிச்சேரியில் முடங்கிக் கிடக்கவில்லை பாரதியார். மாறாக அவரது பார்வை விசாலமடைந்தது. எழுத்து கூர்மை பெற்றது. அவரது எழுத்துக்களும், கவிதைகளும் இந்தியாவிற்குள் சுதந்திர வேள்வியை வளர்த்துக் கொண்டிருந்தன. 1910-ல் காந்தியைத் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்யும் வகையில் பாரதி தனது இந்தியா பத்திரிக்கையில் காந்தியாரைப் பசுவாகப் படம் போட்டு இந்தியாவுக்கு வழி காட்ட வரும் தலைவர் என்று எழுதினார். அப்போது காந்தி தென்னாப்பிரிக்காவில் போராடிக் கொண்டிருந்தார்.

### ...) பாரதியாரும் மகாத்மா காந்தியும்

1919, பிப்ரவரி மாதம் சென்னையில் மகாத்மா காந்தியைச் சந்திப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே காந்தியாரின் அறவழி அரசியலைப் புரிந்து ஏற்றுப் பாராட்டி விளக்கம் தந்து எழுதிய கவிஞன் என்ற வகையில் பாரதி ஒரு தீர்க்கதரிசி ஆவார். முதல் உலகப் போருக்குப் பிறகு காந்தியடிகளின் அரசியல் நடவடிக்கைகள் இந்தியாவில் வேகம் பெற்றன. பஞ்சாபில் கொண்டு வரப்பட்ட ...லட் சட்டத்தை எதிர்த்தும், கிலாபத் இயக்கத்தை ஆதரித்தும் நாடு ...முவதிலும் சுற்றுப் பயணம் செய்தார் காந்தி.

Scanned with CamScanner

அந்நியத் துணிகளை ஒதுக்கித் தள்ளவும், வாங்கிய துணிகளைக் கொளுத்தவும் அந்நியப் பொருள் நிராகரிப்பு இயக்கத்தை 1919-ல் தான் காந்தியடிகள் துவக்கினார். ஆனால் பாரதியார் விபின் சந்திரபாலரை அழைத்து வந்து சென்னையில் தொடர் கூட்டங்களை நடத்திய பின்பு சென்னைக் கடற்கரையில் 1906-லேயே அந்நியத் துணிகளைக் கொளுத்தி மக்கள் வேள்வியை நடத்தினார் பாரதியார். இவ்வாறு அந்நியத் துணிகளை ஒதுக்கித் தள்ளுவது என்ற இயக்கத்தைத் தொடங்கி வைத்ததிலும் பாரதியாருக்குத் தனிச் சிறப்பு உண்டு.

1915-ல் சாந்திநிகேதனில் காந்தியார் சில வாரங்கள் தங்கியிருந்தார். காந்தியாரின் தூய்மையான எளிமையான வாழ்க்கை முறை, சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இல்லாத பெருமை கண்டு ரவீந்திரநாத் தாகூர் அவரை 'மகாத்மா' என அழைத்தார் என்பது வரலாறு. ஆனால் 1915-ல் தாகூர் மகாத்மா என்று அழைப்பதற்கு முன்பாகவே 1910-ம் ஆண்டிலேயே 'வாழ்க நீ எம்மான் - மகாத்மா நீ வாழ்க' என்று பாடலை பாரதி எழுதிவிட்டார். இவ்வாறு காந்தியடிகளை மகாத்மா என்று பேசி மகிழ்ந்தார் பாரதி!

### f) பாரதியாரின் புரட்சிக் கருத்துக்கள்

இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் இந்தியாவைச் சேர்ந்த பல பிரிவினர் பங்காற்றியுள்ளனர். குறுநில மன்னர்கள் தங்கள் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளவே போராடினர். பெரிய தொழிலதிபர்களும், பணக்காரர்களும் தங்கள் தொழிலைப் பாதுகாத்துக் கொள்ளவே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தீவிரவாதிகள் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைக் கொண்டே சுதந்திரப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்பதில் நம்பிக்கை கொள்ளாமல் ஆயுதத்தின் மீது முழு நம்பிக்கை வைத்துப் போராடினர். அந்நிய ஆட்சியை அகற்றிவிட்டு நம் நாட்டை நாமே ஆளும் உரிமை வந்தால் போதும் என்ற லட்சியத்தை தேசியவாதிகள் கொண்டிருந்தனர்.

ஆனால் இவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சுதந்திரப் போராட்ட வீரராகத் திகழ்ந்தார் பாரதி. அரைகுறை சுதந்திரம் அல்லது தெளிவற்ற அரசியல் லட்சியத்தை உணர்ச்சி வசப்பட்டு மேற்கொண்ட சாதாரண அரசியல்வாதி அல்ல பாரதி. நாட்டு மக்களிடையே அதிகமாகக் காணப்பட்ட வறுமை அவரைக் கலங்க வைத்தது. சாதிமத வேறுபாடுகளையும், மூட நம்பிக்கைகளையும் ஒழிக்க வேண்டும் என்று கருதினார். இஸ்லாமியர்கள் பெண்களை நடத்துகிற முறையில் சீர்திருத்தம் தேவை என்று நட்பு முறையில் எழுதினார். கிறிஸ்தவ மிஷினரிமார்கள் இந்துக்களை மதமாற்றம் செய்ததைச் சாடாமல்

த்திற்குக் காரணமான இந்துக்களிடம் காணப்பட்ட தீண்டாமைக் கொடுமையைக் கண்டித்தார். இந்து மதத்தில் காணப்படும் குறைகள் தான் மதமாற்றத்திற்குக் காரணம் என்றார்.

அந்நிய ஆட்சி அகன்று பொருளாதார சமத்துவம் ஏற்பட்டு சாதிமத வேறுபாடும் ஒழிவது நல்லது என்று கருதினார். மேலும் பெண்ணடிமைத் தனம் ஒழிக்கப்பட வேண்டும் என்றார். பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும், கல்வி பயில, பதவிகள் வகிக்க உரிமை வேண்டும், விரும்பியவரை திருமணம் செய்து கொள்ள உரிமை வேண்டும், விவாகரத்து செய்யும் உரிமை வேண்டும், கணவன் இறந்து போனால் மறுமணம் செய்து கொள்ள உரிமை வேண்டும் என்று தெளிவாக எழுதினார். இத்தகைய சுதந்திரத்திற்கான முழுப் பார்வையுடன் பாரதி அரசியலில் ஈடுபட்டதும், அதை அடிப்படையாகக் கொண்டே அவரது கவிதைகள் பிறந்தன என்பதும் கவனிக்கத் தக்கவை ஆகும்.

தேசிய அளவில் மிகத் தெளிந்த பார்வை கொண்டிருந்த பாரதியார் பாண்டிச்சேரியில் வாழ்ந்த காலத்தில் உலகில் நிகழ்ந்த செய்திகளைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். 1917-ல் ரஷ்யாவில் நடைபெற்ற கம்யூனிச புரட்சியைப் பற்றி புகழ்ந்து எழுதினார். .ரஷ்யப் புரட்சியை சமதர்மப் புரட்சி என்றும், லெனினை கற்றறிந்த ஞானி என்றும் பாராட்டினார். ரஷ்யப் புரட்சியை பாரதி வரவேற்றாலும் ரஷ்ய முறைகள் இந்தியாவுக்குப் பொருந்தாது என்று எழுதினார்.

### ஐ) 1918-ம் ஆண்டுக்குப் பிறகு விடுதலைப் போரில் பாரதியார்

பாண்டிச்சேரியிலிருந்து 1918-ல் பாரதியார் தமிழ் நாட்டிற்குத் திரும்பிவிட முயன்ற போது வில்லியனூருக்கு அருகில் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் அன்னிபெசன்ட், சுதேசமித்திரன் அதிபர் சி.பி.ராமசாமி ஐயர், அன்றைய சென்னை காவல்துறை துணைக் கமிஷனர் ஆகியோரின் முறையீட்டின் பேரில் பாரதியார் நிபந்தனையுடன் விடுவிக்கப் பட்டதாகத் தெரிகிறது.

வெளியில் வந்த பாரதியார் ஆசிரமத்தை நாடி ஓடிவிடவில்லை. வெள்ளையருக்கு துதிபாடிப் பிழைக்கவும் செல்லவில்லை. மாறாக தொடர்ந்து சுதந்திர தாகத்தை வளர்க்கும் பாடல்களை எழுதி வந்தார். தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களில் சுற்றுப் பயணம் செய்தார். 1919, மார்ச்சில் தான் காந்தியாரைச் சந்தித்து உரையாடினார் என்பதும் வரலாற்றுக் குறிப்பு. எனவே அரசின் எந்த நிபந்தனையும் பாரதியின் எழுத்தை நாவை அடக்கவில்லை. நடமாட்டத்தை நிறுத்தவில்லை.

Scanned with CamScanner

முடக்கவில்லை. இறுதி மூச்சு விடும் வரை இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடிக் கொண்டேயிருந்தார் பாரதியார்!

## மதிப்பீடு

பாரதியார் சிறந்த சுதந்திரப் போராட்ட வீரர் என்பதில் சந்தேகமில்லை. அவர் எத்தனை வருடங்கள் சிறையில் இருந்தார், எவ்வளவு அடிபட்டார் என்பதை வைத்து விடுதலைப் போராட்டத்தில் அவரது பங்கினை மதிப்பிட முயல்வது தவறு ஆகும். பாரதி முதலில் ஒரு மகாகவிஞன். அவரது எழுதுகோல் வாளைவிட சக்தி வாய்ந்தது. காலத்தை வென்றது. புதிய சுதந்திரப் போர்ப் படையைப் படைத்திட்ட கவித் தளபதி அவர். ஒரு நாட்டையே சிந்திக்க வைத்த சிந்தனையாளர். அவர் பாட்டுக்களைக் கேட்டுத் தெளிவு பெற்றோர், விழிப்பு பெற்றோர், வீரம் பெற்றோர், ஆவேசம் கொண்டு சுதந்திர வேள்வியில் குதித்தோர் பட்டியலைக் கணக்கிட முடியாது.

இவ்வாறு சுதந்திர வேள்விக்கு நெருப்பூட்டிய பாரதியார் 1921, செப்டம்பர் 11-ம் தேதி சென்னையிலுள்ள திருவல்லிக்கேணி பார்த்தசாரதி தெருவில் உள்ள தனது வீட்டில் காலமானார்.

Scanned with CamScanner

# 68. சுப்பிரமணிய சிவா

## (Subramania Siva)

சுப்பிரமணிய சிவா தமிழ் நாட்டின் அரும்பெரும் தலைவர் ஆவார். அவரது வாழ்வே அக்கால விடுதலைப் போரின் வீர வரலாறாக விளங்குகிறது. தன் வாழ்நாள் முழுவதும் நாட்டுத் தொண்டுக்கே அர்ப்பணித்த தூயவர். சிந்தையும் செயலும் நாடு, நாடு என்று நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்ட வீர மறவர். ராஜதந்திரத்தில் சிவாஜியைப் போன்றவர். தேசாபிமானத்தில் திலகரைப் போன்றவர். மனிதாபிமானத்தில் சுவாமி விவேகானந்தரைப் போன்றவர். திலகருக்கு நிகரான தொண்டர். சிதம்பரனாரின் ஒப்பற்ற தோழர். தமிழ் நாட்டில் தாய் நாட்டின் விடுதலைக்காக முதன் முதலில் ஆறு ஆண்டுகள் சிறை சென்ற தியாகி சுப்பிரமணிய சிவா ஆவார்.

## சுப்பிரமணிய சிவாவின் வாழ்க்கைக் குறிப்பு

சுப்பிரமணிய சிவா மதுரை மாவட்டம் வத்தலக்குண்டு என் ஊரில் 1884, அக்டோபர் 4-ம் தேதி பிறந்தார். தந்தை ராஜம் அய்ய தாய் நாகம்மாள் ஆவர். இவருக்கு பெற்றோர் இட்ட பெய

சுப்பிரமணியன் ஆகும். தனது 12 வயது வரை மதுரையில் இருந்தார். வறுமை காரணமாகத் திருவனந்தபுரம் சென்று இலவசமாக உணவு கிடைக்கும் ஊட்டுப் புறைகளில் சாப்பிட்டுக் கொண்டு மேற்படிப்பு படித்தார். கோவையில் ஒரு வருடம் புனித மைக்கேல் கல்லூரியில் படித்தார். 1899-ல் மீனாட்சி அம்மை என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். கோவையில் படிக்கும் போதே தாடி மீசை வைத்துக் கொள்ளத் தொடங்கினார் சிவா.

## சுப்பிரமணிய சிவாவின் அரசியல் பிரவேசம்

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரவாதத்தையும், சுதேசி இயக்கத்தையும் உருவாக்கியது வங்கப் பிரிவினையாகும். உறங்கிக் கிடந்த இந்திய நாட்டை நிமிர்ந்து எழவைத்தது. இந்துக்களிடமும், முஸ்லீம்களிடமும் ஒருவருக்கொருவர் வெறுப்படையும் விதமாக 1905 அக்டோபர் 16-ல் வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார் கர்சன் பிரபு. ஆனால் ஆட்சியாளர்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. இந்துக்களும், முஸ்லீம்களும் ஒன்று சேர்ந்து வங்கப் பிரிவினையை எதிர்த்து தெருவில் இறங்கி போராடினர். அன்னியர்களின் பொருட்களை தெருவில் போட்டுக் கொளுத்தினர். பங்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' பாடல் வங்காளம் முழுவதும் ஒலிக்கத் தொடங்கியது. இந்தியா முழுவதும் எதிரொலித்தது இந்தப் பாடல்.

இந்தச் சூழலில் தான் தேசிய இயக்கத்தில் தீவிரவாதிகள் வலுப் பெறத்தொடங்கினர். தீவிரவாதிகள் முழு விடுதலைக் கோரிக்கையையே முன்வைத்துப் போராடினர். தீவிர தேசியத்தின் முத்தலைச் சூலமாக விளங்கியவர்கள் லாலா லஜபதிராய், பாலகங்காதர திலகர், விபின் சந்திரபாலர் ஆகியோர் ஆவர். இச்சமயத்தில் தமிழ் நாட்டில் வ.உ.சிதம்பரனாரும், மகாகவி பாரதியாரும் ஆங்கில ஆட்சியாளர்களை எதிர்த்து களம் இறங்கினர்.

சுப்பிரமணிய சிவா இக்காலத்தில் திருவனந்தபுரத்தில் ஆரிய சமாஜியான தாகூர்கான் என்ற உயரிய தேசபக்தரின் சொற்பொழிவைக் கேட்டு நெஞ்சில் சுதந்திரக்கனலை வளர்த்து வந்தார். திருவனந்தபுரத்தில் இளைஞர்களை ஒன்று திரட்ட 'தர்ம பரிபாலன சமாஜம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இதனால் திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அதன்பிறகு ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்தார். 1908, பிப்ரவரி மாதம் தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தார் சிவா.

## கோரல்மில் தொழிலாளர் போராட்டத்தில் சிவா

1900-ம் ஆண்டிலேயே ஒட்டப்பிடாரத்திலிருந்து தூத்துக்குடிக்கு வந்து வழக்கறிஞர் தொழில் செய்து வந்தார் வ.உ.சி. ஆனால் அவர் உணர்வில் நாட்டு விடுதலையே ஆட்கொண்டது. ஆங்கிலேயரின் கடல் வாணிபத்துக்கெதிராக 1906-ல் சுதேச கப்பல் கம்பெனியைத் தொடங்கினார் வ.உ.சி. தூத்துக்குடி வந்த சிவா சிதம்பரனார் இல்லத்தில் தங்கி பணிபுரிந்தார். மக்களிடம் சுதந்திர தாகத்தை ஊட்டினார். கனல் தெறிக்கும் ஆவேச சொற்பொழிவாற்றினார்.

தூத்துக்குடியில் இருந்த கோரல் மில்லில் வேலை செய்த தொழிலாளர்கள் வெறும் கூலிகள் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டனர். குறைவான ஊதியம் பெற்று கடுமையான வேலை செய்தனர். விடுமுறை கிடையாது. இந்த கோரல்மில் தொழிலாளர் பிரச்சனையைப் போக்க வ.உ.சி., சிவா ஆகியோர் வேலை நிறுத்தம் செய்யத் திட்டமிட்டனர். 1908, பிப்ரவரி 23-ல் கோரல் மில் தொழிலாளர்களிடையே சிவா சொற்பொழிவாற்றினார். வேலை நிறுத்தம் செய்தால் தான் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க முடியும் என்றார். இதனால் வ.உ.சி, சிவா ஆகியோரின் தலைமையில் கோரல்மில் தொழிலாளர்கள் 1908, பிப்ரவரி 27-ல் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கினர். ஊதிய உயர்வு வார விடுமுறை, இதர விடுமுறை வசதிகள் ஆகியவை போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகள் ஆகும்.

சிவாவின் சொற்பொழிவுகளால் உந்தப்பட்ட ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் தூத்துக்குடி வீதிகளில் ஊர்வலம் நடத்தினர். இந்த வேலை நிறுத்தம் தூத்துக்குடி மக்களிடையே தீவிர நாட்டுப் பற்றை ஊட்டியது. நகரமே தேசபக்தியின் உறைவிடமாகத் திகழ்ந்தது. இறுதியில் போராட்டம் வென்றது. ஊதியத்தை உயர்த்தவும், ஞாயிறு விடுமுறை அளிக்கவும் ஒத்துக் கொண்டது. 1908 மார்ச் 6-ம் தேதி தூத்துக்குடி கடற்கரைக் கூட்டத்தில் முழங்கினார் சிவா. ஒன்றுபட்டு போராடியதால் வெள்ளையரை எதிர்த்து வெற்றி பெற்றுள்ளோம் என்றார். தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டத்துக்கு கிடைத்த இந்த வெற்றியானது இந்தியா முழுவதும் எதிரொலித்தது.

இந்த கோரல்மில் போராட்டத்தின் விளைவாக மற்ற ஐரோப்பிய நிறுவனங்களில் பணி புரிந்தவர்கள் அரசியல் உணர்வு பெற்றனர். போராடும் உணர்ச்சியைப் பெற்றனர். படித்தவர்களுக்கும் சாதாரண ஆலைத் தொழிலாளர்களுக்குமிடையே ஒரு பிணைப்பு ஏற்பட்டது. ஆனால் வ.உ.சி, சிவா ஆகியோரால் தூண்டிவிடப்பட்ட

Scanned with CamScanner

கோரல்மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஆங்கிலேயரின் நெஞ்சில் அச்சத்தை ஏற்படுத்தியது. சிவாவின் வீர உரைகளால் பொதுமக்கள் அனைவரும் சுதந்திர உணர்ச்சி பெற்றனர். ஆங்கில ஆட்சி மீது வெறுப்பைக் காட்டினர். பொருளாதார, அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்த தேசபக்தர் இருவரையும் பழிவாங்கத் துடித்தனர் ஆட்சியாளர்கள். தக்க தருணத்திற்காகக் காத்திருந்தனர்.

## சுப்பிரமணிய சிவாவின் முதல் சிறைவாசம்

1908 மார்ச் மாதம் 9-ம் தேதி அன்று விபின் சந்திரபாலர் விடுதலை ஆன தினத்தை நாடு முழுவதும் சுயராஜ்ய தினமாகக் கொண்டாடுமாறு தீவிர தேசியத் தலைவர்கள் முடிவு செய்தனர். தூத்துக்குடியில் வ.உ.சி, சிவா ஆகியோர் தலைமையில் வெற்றி விழாவைக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. தூத்துக்குடியில் கூட்டத்திற்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் நெல்லையில் நடத்தத் திட்டமிட்டனர். அப்போது நெல்லை கலெக்டராக இருந்த விஞ்ச் என்பவர் அதே நாளில் தன்னை வந்து சந்திக்குமாறு, வ.உ.சிக்கும், சிவாவிற்கும் கட்டளையிட்டார். விசாரணை நடைபெற்றது. அன்று மாலை தாமிரபரணி கரையில் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது வ.உ.சியும், சிவாவும் வீர உரை ஆற்றினார்கள். விசாரணையும் தினந்தோறும் நடைபெற்றது. 1908, மார்ச் 12-ல் சிவாவும், வ.உ.சியும் நெல்லையில் திடீரென்று கைது செய்யப்பட்டனர்.

இந்தச் செய்தி காட்டுத்தீ போல பரவியது. தூத்துக்குடியில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். கடைகள் அடைக்கப்பட்டன கோரல்மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அரசியல் காரணங்களுக்காக இந்தியாவில் தொழிலாளர்கள் செய்த முதல் வேலை நிறுத்தம் இதுதான். திருநெல்வேலியில் போராட்டம் கலவரமாக மாறியது. அரசாங்க கட்டிடங்கள் தீ வைக்கப்பட்டன. துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் இறந்தனர். 1908, ஜூலை 7-ம் தேதி நீதிபதி பின்ஹே என்பவர் வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், சிவாவுக்கு பத்தாண்டு கடுங்காவல் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். தண்டனையை இருவரும் அமைதியாக ஏற்றுக் கொண்டனர். பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார் வ.உ.சி. திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார் சிவா. இந்தத் தீர்ப்பைக் கண்டித்து பாரதியார் 'இந்தியா' பத்திரிக்கையில் ஆவேசமாக எழுதினார். பெங்காலி மற்றும் வந்தே மாதரம் போன்ற வங்கப் பத்திரிக்கைகள் கண்டித்தன. இந்த சிறை வாசத்திலிருந்து சுப்பிரமணிய சிவா 1912, நவம்பர் 2-ம் தேதி விடுதலையடைந்தார். விடுதலைக்குப் பின் சென்னையில் குடியேறினார் சிவா.

Scanned with CamScanner

ோரல்மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஆங்கிலேயரின் நெஞ்சில் அச்சத்தை ஏற்படுத்தியது. சிவாவின் வீர உரைகளால் பொதுமக்கள் னைவரும் சுதந்திர உணர்ச்சி பெற்றனர். ஆங்கில ஆட்சி மீது வெறுப்பைக் காட்டினர். பொருளாதார, அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்த தேசபக்தர் இருவரையும் பழிவாங்கத் துடித்தனர் ஆட்சியாளர்கள். தக்க தருணத்திற்காகக் காத்திருந்தனர்.

## ப்பிரமணிய சிவாவின் முதல் சிறைவாசம்

1908 மார்ச் மாதம் 9-ம் தேதி அன்று விபின் சந்திரபாலர் விடுதலை ஆன தினத்தை நாடு முழுவதும் சுயராஜ்ய தினமாகக் கொண்டாடுமாறு தீவிர தேசியத் தலைவர்கள் முடிவு செய்தனர். தூத்துக்குடியில் வ.உ.சி, சிவா ஆகியோர் தலைமையில் வெற்றி விழாவைக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. தூத்துக்குடியில் கூட்டத்திற்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் நெல்லையில் நடத்தத் திட்டமிட்டனர். அப்போது நெல்லை கலெக்டராக இருந்த விஞ்ச் என்பவர் அதே நாளில் தன்னை வந்து சந்திக்குமாறு வ.உ.சிக்கும், சிவாவிற்கும் கட்டளையிட்டார். விசாரணை நடைபெற்றது. அன்று மாலை தாமிரபரணி கரையில் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. வ.உ.சியும், சிவாவும் வீர உரை ஆற்றினார்கள். விசாரணையும் தினந்தோறும் நடைபெற்றது. 1908, மார்ச் 12-ல் சிவாவும், வ.உ.சியும் நெல்லையில் திடீரென்று கைது செய்யப்பட்டனர்.

இந்தச் செய்தி காட்டுத்தீ போல பரவியது. தூத்துக்குடியில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். கடைகள் அடைக்கப்பட்டன. கோரல்மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அரசியல் காரணங்களுக்காக இந்தியாவில் தொழிலாளர்கள் செய்த முதல் வேலை நிறுத்தம் இதுதான். திருநெல்வேலியில் போராட்டம் கலவரமாக மாறியது. அரசாங்க கட்டிடங்கள் தீ வைக்கப்பட்டன. துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் இறந்தனர். 1908, ஜூலை 7-ம் தேதி நீதிபதி பின்ஹே என்பவர் வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், சிவாவுக்கு பத்தாண்டு கடுங்காவல் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். தண்டனையை இருவரும் அமைதியாக ஏற்றுக் கொண்டனர். பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார் வ.உ.சி. திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார் சிவா, இந்தத் தீர்ப்பைக் கண்டித்து பாரதியார் ‘இந்தியா’ பத்திரிக்கையில் ஆவேசமாக எழுதினார். பெங்காலி மற்றும் வந்தே மாதரம் போன்ற வங்கப் பத்திரிக்கைகள் கண்டித்தன. இந்த சிறை வாசத்திலிருந்து சுப்பிரமணிய சிவா 1912, நவம்பர் 2-ம் தேதி விடுதலையடைந்தார். விடுதலைக்குப் பின் சென்னையில் குடியேறினார் சிவா.

Scanned with CamScanner

சுப்பிரமணிய சிவா திருச்சி சிறையில் இருந்த போது சிறை அதிகாரிகள் சிவாவுக்கு செய்த கொடுமைகளுக்கு அளவே இல்லை. சிறையில் அவருக்கு கடினமான வேலைகள் கொடுக்கப்பட்டன. முக்கியமாக ஆட்டு ரோமத்தை அடித்து சிக்கு நீக்கும் பணி கொடுக்கப் பட்டது. ஆம் ஒரு உயர் குலத்தில் பிறந்த துறவியான சிவா இந்த கடினமான பணியைச் செய்தார். அத்துடன் இந்தப் பணி அருவறுப்பானதும் ஆகும். அதைச் செய்தால் உடல் நலம் கெடும். ஆட்டு ரோமத்தை சுண்ணாம்பில் போட்டு நன்று ஊற வைத்து, அதை வில்லால் பஞ்சு அடிப்பது போல் அடித்து ரோமத்தை சிக்கு நீக்கி பிறகு விரலால் பிரித்தெடுத்து அதை நெசவுக்கு அனுப்ப வேண்டும்.

இந்தப் பணியால் சிவாவின் நுரையீரல் பாதிக்கப்பட்டு காச நோயால் பாதிக்கப்பட்டார். பிறகு தொழு நோய்க்கான அறிகுறிகள் அவர் உடலில் தென்படலாயின. தொழு நோயால் பாதிக்கப்பட்ட சிவா சேலம் சிறைக்கு மாற்றப்பட்டார். தொழுநோய் அவர் உடலைத் தொடர்ந்து வேட்டையாடியது. தண்டனை காலத்தைக் கழித்த சிவா பரங்கியர் பரிசாகக் கொடுத்த தொழு நோயுடன் தான் சிறையிலிருந்து விடுதலையானார்.

## பத்திரிக்கையாளராக சுப்பிரமணிய சிவா

சென்னையில் குடியேறிய பின்னர் சிவா 'ஞானபாநு' என்ற மாதப் பத்திரிக்கையை 1913-ல் மயிலையில் இருந்து தொடங்கினார். சிவாவிடம் நெருக்கமாகப் பழகிய பாரதியார் ஞானபாநு பத்திரிக்கை பிறப்பதைப் பாராட்டி கட்டுரை எழுதினார். ஞானபாநு பத்திரிக்கையில் ஆன்மீகக் கட்டுரைகள் அதிகம் பிரசுரமாயின. பாரதியாரின் கவிதைகளும் கட்டுரைகளும் பிரசுரமாயின. 'பிரபஞ்ச மித்திரன்' என்ற வாரப் பத்திரிக்கையையும் தொடங்கினார் சுப்பிரமணிய சிவா. சிறந்த ஆன்மீகக் கட்டுரைகளையும் சமுதாய அக்கரையுடைய கட்டுரை களையும் எழுதினார் சிவா. சுதந்திர போராட்டத்திற்கு வலிமை சேர்க்கும் விதமாக பத்திரிக்கைகளை கையாள்வதிலும் சிவா சிறந்து விளங்கினார். 'உறங்கிக் கிடக்கும் தமிழ் ஜாதியரை அறிவாகிய சாட்டையாலடித்து எழுப்பி அவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்க வேண்டும்' என்பதே தனது பத்திரிக்கைகளின் நோக்கம் என்றார் சிவா. சிறந்த பத்திரிக்கையாளரான சிவா பத்திரிக்கையாசிரியரின் கடமை, லட்சியம் முதலியவற்றில் தெளிவான பார்வை கொண்டு விளங்கினார்.

1915, மே 15-ல் தனது மனைவி மீனாட்சி இறந்த பிறகு சிவா தன்னை முழுவதுமாக நாட்டிற்கே ஒப்புவித்துக் கொண்டார். எழுத்து

Scanned with CamScanner

துறையில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். அரசியல், ஆன்மீகம், சமூகம் சம்மந்தமான நூல்களை எழுதிக் குவித்தார். வீரத் துறவி விவேகானந்தரின் எழுத்துக்களை வெளியிட்டார். எந்த நிலையிலும் நாட்டுப் பணியே முதன்மையான இடத்தைப் பிடித்தது. துறவுகூட நாட்டு விடுதலைப் பணியில் தங்குதடையின்றி ஈடுபடுவதற்காகவே என்றும், முக்தி என்பதே நாட்டு விடுதலை தான் என்றும் எழுத்திலும், பேச்சிலும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். ஆனால் 1919-ம் ஆண்டு முதலே தொழுநோயினால் அவரது உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. உடல்நிலை பற்றி கவலை கொள்ளாமல் கடுமையாக உழைத்தார் சிவா.

## சுப்பிரமணிய சிவாவின் பாரத ஆசிரமம்

தனது லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக சிவா பாரத ஆசிரமம் என்ற அமைப்பை நிறுவினார். 1921-ல் காரைக்குடியில் தான் முதலாவது பாரத ஆசிரமம் ஆரம்பிக்கப்பட்டது. இளைஞர்களை உறுப்பினராக்கி அவர்களுக்கு தேசபக்தியை ஊட்டினார். தேசிங்குராஜா போன்ற நாடகங்களை நடத்தி நாட்டுப் பற்றையும், இந்து முஸ்லீம் ஒற்றுமையை யும் ஏற்படுத்தினார். 1921, நவம்பர் 17-ல் அரசுக்கெதிராக சொற்பொழி வாற்றினார் என்று குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னர் பாரத ஆசிரமத்தை மீண்டும் உயிர்ப்பித்தார். பாரத ஆசிரமத்தின் சார்பில் கிளர்ச்சிகளும் பொதுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. காரைக்குடியில் உள்ள பாரத ஆசிரமத்தில் தர்மபுரி மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஊர்களிலிருந்து பலர் உறுப்பினர்களாக இருந்தனர்.

தமிழகம் முழுவதும் பாரத ஆசிரமம் சார்பில் சுற்றுப் பயணம் செய்து தேச சேவை செய்து வந்தார்கள். என்றாலும் தலைமையிடம் பின்னர் பாப்பாரப்பட்டியில் அமைத்துக் கொண்டது குறிப்பிடத் தக்கது ஆகும். பாப்பாரப்பட்டி தோழர்களுடன் சிவா எப்போதும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். அவர்களில் சின்னமுத்து முதலியார் என்பவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

## சுப்பிரமணிய சிவாவின் பாரதமாதா ஆலயம்

1920-ல் கல்கத்தாவில் கூடிய ஒத்துழையாமை இயக்க சிறப்பு மாநாட்டில் கலந்து கொண்டார். பின்னர் ஆம்பூர் கிலாபத் மாநாடு, விழுப்புரம் அரசியல் மாநாடு முதலியவற்றில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார். சந்நியாசியைப் போன்று காவி உடை தரித்து 'ஸ்வதந்திரானந்தர்' என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார். சுப்பிரமணிய சிவாவின் ஜாதி பாரத ஜாதி, அவரது மதம் பாரதிய மதம்,

Scanned with CamScanner

அவரது வழிபடு தெய்வம் பாரதமாதா. ஆம் பாரதமாதாவுக்கு கோவில் கட்டி அனைத்து மக்களும் ஜாதி மத பேதமில்லாமல் பாரத மாதாவை வணங்க வேண்டுமென்பதுதான் அவரது கடைசி விருப்பமாக இருந்தது.

பாப்பாரப்பட்டியில் பாரதமாதா கோவில் கட்டுவதற்கு 1923-ல் நிலம் வாங்கப்பட்டது. இதற்கு சின்னமுத்து முதலியார் பெரிதும் உதவி செய்தார். 1923, ஜூன் 22-ம் தேதி தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் அவர்களைக் கொண்டு பாரதமாதா கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டு விழாவை வெகு விமரிசையாக நிறைவேற்றினார் சிவா.

## சுப்பிரமணிய சிவாவின் தொழிலாளர் நலக் கொள்கை

தேச விடுதலையில் தீவிரமாக ஈடுபட்டதுடன் தொழிலாளர் நலனிலும் அக்கறை கொண்டார் சிவா. சென்னையில் டிராம்வே தொழிலாளர் தலைவர்களான சிங்காரவேலர், சக்கரைச் செட்டியார், திரு.வி.க. ஆகியோர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். தொழிலாளர் பிரச்சனைகளில் ஆழ்ந்த அக்கறையுடன் செயல்பட்டார். ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை மேற்கொண்டார். இவ்விதமான தொழிற்சங்க ஈடுபாட்டால் பொதுவுடைமைக் கொள்கை மீது நாட்டம் கொண்டார் சிவா. சென்னை மாநகரில் முதல் முறையாக மே தினம் கொண்டாடப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிகழ்ச்சியை 1923, மே மாதம் கொண்டாடியவர்கள் சிங்காரவேலரும் தேசபக்தர் சுப்பிரமணிய சிவாவும் ஆவர்.

## சுப்பிரமணிய சிவாவின் மறைவு

எந்த நிலையிலும் எந்த நேரமும் நாட்டுத் தொண்டு ஒன்றையே தனது கடமையாகக் கொண்டு வாழ்ந்தவர் சிவா. மேலும் பல ஊர்களில் பாரதமாதா ஆலயம் அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்ட சிவா ஊர் ஊராகச் சென்று வெள்ளை அரசாங்கத்திற்கு எதிராகப் பல கூட்டங்களில் பேசினார். அதனால் பலமுறை போலீசாரால் கைது செய்யப்பட்டார். 'சிவா கடுமையான தொழு நோயாளி' அவர் மக்கள் பயன்படுத்தும் ரயில், பஸ் போன்றவற்றில் பயணம் செய்யக் கூடாது என்று அரசாங்கம் சிவாவுக்கு எதிராக ஒரு உத்தரவு பிறப்பித்தது. ஆனால் சிவா அஞ்சிவிடவில்லை. அருகிலுள்ள ஊர்களுக்கு கால்நடையாகப் பயணம் செய்தார். தொலைதூர ஊர்களுக்கு மாட்டு வண்டி, குதிரை வண்டிகளில் பயணம் செய்தார். இதனால் அவரது உடல்நிலை பெரும் பாதிப்புக்குள்ளாகியது.

நோயின் கொடுமை தாங்காத நிலையிலும் 1925 ஜூலை 22-ம் தேதி அன்று பாப்பாரப்பட்டி பாரதமாதா ஆசிரமத்திற்கு மதுரையிலிருந்து சுந்தரபாரதி என்ற தனது சீடருடன் புறப்பட்டு வந்து சேர்ந்தார். மறுநாள் 23-ம் தேதி காலை ஐந்து மணிக்கு ஆசிரமத்தில் 41-ம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார் சுப்பிரமணிய சிவா.

சிவா ஒரு விடுதலைப் போராட்ட வீரர். திலகர் வழியில் செயல்பட்ட தமிழ்நாட்டின் தியாக சீலர். தன்னலம் கருதா தூயவர். தன்னையே துறவியாக்கிக் கொண்டவர். நாட்டு விடுதலையே முக்கியமென கருதிய புரட்சிக்காரர். சிறந்த கவிஞர். பத்திரிக்கையாளர், நூலாசிரியர், எழுத்தாளர் ஆவார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் சுப்பிரமணிய சிவாவின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

Scanned with CamScanner